# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C – 71/2018**

**Deposition of Witness for Prosecution : P.W. 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகுமலை | Caste | : |
| Father/Husband Name | : பழனிச்சாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A1 present. Others Absent. Petition field and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 18.03.2024**

**முதல் விசாரணை**

நான் உத்தப்பநாயக்கனூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் 1வது எதிரியை எனக்கு தெரியும். போலீசார் மேற்படி எதிரியை கைது செய்தபோதுதான் என்னிடம் காட்டினார்கள். கடந்த 2017 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் மாலை 04.00 மணியளவில் உத்தப்பநாயக்கனூர் வில்பாப் பள்ளி அருகே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நானும் எனது மனைவியும் சென்றுகொண்டிருந்தோம். என் மனைவி எனக்கு முன்னே 15 அடி தூரத்தில் சென்றுகொண்டிருந்தார். எனது மனைவி "எப்பா" என்று சத்தம்போட்டார். அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் எனது மனைவி கழுத்தில் இருந்த தாலி கயிற்றில் இருந்த 1/2 பவுன் தங்க தாலி மற்றும் 1/2 பவுன் எடை கொண்ட தங்க காசு மற்றும் தங்க குண்டுமணி ஆகியவற்றை அறுத்துகொண்டு சென்று விட்டார்கள். இது சம்பந்தமாக என் மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் எங்களது நகைகளை மீட்டு கொடுத்தார்கள். நீதிமன்றத்தில் மனு செய்து நகைகளை பெற்றுகொண்டோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தபோது மாலை சுமார் 04.00 மணி இருக்கும். ரோட்டிற்கு கிழக்கு பக்கம் நாங்கள் இருவரும் வந்துகொண்டிருந்தோம். எனது மனைவி முன்னே செல்ல அவருக்கு பின்னால் நான் வந்து கொண்டிருந்தேன். போலீசார் எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து காட்டிய பின்புதான், அவர்களை எனக்கு அடையாளம் தெரியும் என்றால் சரிதான். எதிரிகள் எந்த நிற வாகனத்தில் வந்தார்கள், எந்த நிற ஆடை அணிந்திருந்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகளுக்கு இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், போலீசார் புள்ளி விபர கணக்கிற்காக பொய் வழக்கு பதிவு செய்ய என் மனைவியிடம் பொய் புகார் பெற்று வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றாலும், அதற்கு ஆதவராக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C – 71/2018**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : பஞ்சவர்ணம் | | Caste | : |
| Father/Husband Name | : அழகுமலை | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(A1 present. Others Absent. Petition field and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 18.03.2024**

**முதல் விசாரணை**

நான் உத்தப்பநாயக்கனூரில் வசித்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரியை எனக்கு தெரியும். போலீசார் என்னிடம் இவரை அடையாளம் காட்டினார்கள். கடந்த 2017 ஆம் ஆண்டு மாலை 04.00 மணியளவில் எங்கள் தோட்டத்திற்கு செல்லும்வழியில், வில்பாப் பள்ளி அருகே நான் முன்னே செல்ல, என் கணவர் என்னை பின் தொடர்ந்து சாலையின் ஓரமாக நடந்து வந்துகொண்டிருந்தபோது, எங்களுக்கு பின்னால் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்கள் என் கழுத்தில் இருந்த 1/2 பவுன் தங்க தாலி மற்றும் 1/2 பவுன் எடை கொண்ட தங்க காசு மற்றும் தங்க குண்டுமணி ஆகியவற்றை அறுத்துகொண்டு சென்று விட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நகைகளை போலீசார் மீட்டு கொடுத்தார்கள், அதை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுகொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை என்னுடையதுதான். மேற்படி புகைப்படத்துடன் கூடிய சி.டி (குறுந்தகடு) **(அ.சா.பொ.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை போலீசார் எழுதினார்கள். நான் சொல்ல சொல்ல புகாரை போலீசார் எழுதினார்கள் நான் அதில் கையெழுத்து போட்டேன். எங்களது தோட்டம் வில்பாப் பள்ளிக்கு எதிரே உள்ளது. தென்வடல் ரோட்டிற்கு வில்பாப் பள்ளிக்கு எதிரே மேற்கே உள்ளது. மேற்படி வில்பாப் பள்ளி ரோட்டிற்கு கிழக்கே உள்ளது. நாங்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கிழக்கம் பக்கமாக வந்தோம். எதிரி 2 நபர்கள் வந்தார்கள். எதிரிகள் இரண்டு பேரையும் போலீசார் என்னிடம் காட்டியபோதுதான் அவர்களை எனக்கு தெரியும். எதிரிகள் இருவரில் யார் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார்கள், யார் எனது செயினை அத்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லப்படும் வாகனத்தின் எண் மற்றும் நிறம் தெரியுமா என்றால் தெரியாது. வில்பாப் பள்ளிக்கு அருகே எப்போதும் இரண்டு மூன்று வேன்கள் மற்றும் டிரைவர்கள் இருப்பார்கள் என்றால் சரியல்ல. எப்போதும் அந்த இடத்தில் ஆள்நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். எனது கழுத்திலிருந்து செயினை இழுத்தார்கள் எனது தாலி கயிறு அந்து எனக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது. புகாரில் எனக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் போலீசாரிடம் சொன்னேன். மேற்படி காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாலி கயிறுடன் அறுத்து சென்றுவிட்டதாக புகாரில் சொல்லியுள்ளீர்களா என்றால் போலீசார் விசாரணையில் சொன்னேன். சம்பவம் இடம் வில்பாப் பள்ளி தாண்டியவுடன் நடந்தது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.